வாக்குமூலம்

குற்றவியல் நீதிமன்றம், இராமநாதபுரம்

வழக்கு எண் MCOP. No. 56/2025

வழக்கு சாட்சி – ம.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :: திரு.பாண்டியராஜன் | தொழில் | :: ஆட்டோ விற்பனை |
| த பெயர் | :: அய்யனன் | வயது | :: 46/2026 |
| கிராமம் | :: பரமக்குடி | | |
| தாலுகா | :: பரமக்குடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 12.03.2026.

**முதல் விசாரணை** (நேரம் : மதியம் 01.00 மணி)

நான் மனுதாரர் ஆவேன், என்னுடைய சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையெழுத்துகள் என்னுடையவைதான். என்னுடைய தகவலின் அடிப்படையில் தான் அது தயார் செய்யப்பட்டது. என்னுடைய ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.1 (அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது.) எதிர்மனுதாரர் வாகனத்தின் வாகன விபரங்கள் கணினி ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ.2. எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவுச்சான்று கணினி ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ.3. எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநர் உரிமம் கணினி ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ.4. எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை கணினி ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ.5. என்னுடைய வாகனத்தின் பதிவுச்சான்று கணினி ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ.6. என்னுடைய வாகனத்தின் காப்பீடுச்சான்று கணினி ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ.7. என்னுடைய ஓட்டுநர் உரிமம் கணினி ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ.8. என்னுடைய வாகனத்தின் மோட்டர் வாகன ஆய்வறிக்கை கணினி ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ.9. விபத்து சம்பந்தமாக என்னுடைய மனைவி கொடுத்த புகார் வாக்குமூலம் சான்றிட்ட ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ.10. முதல் தகவல் அறிக்கை கணினி ஜெராக்ஸ் நகல்

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.03.12 16:55:20 +0530

ம.சா.ஆ.11. சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை சான்றிட்ட ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ.12. மேற்படி குற்ற வழக்கில் சாட்சிகளிடம் பதிவு செய்யப்பட்ட கு.வி.மு.ச பிரிவு 161(3) வாக்குமூலங்கள் சான்றிட்ட ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ.13. பார்வை மகஜர் கணினி ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ.14. மாதிரி வரைபடம் கணினி ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ.15. குற்ற இறுதி அறிக்கை சான்றிட்ட ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ.16. காயச்சான்றிதழ் சான்றிட்ட ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ.17. எனக்கு இராமநாதபுரம், அரசு மருத்துவமனையில் எடுக்கப்பட்ட CT Scan flim -2 மற்றும் அறிக்கை ம.சா.ஆ.18 வரிசை. மதுரை, வடமலையான் மருத்துவமனையில் எடுக்கப்பட்ட CT Scan flim -3 மற்றும் அறிக்கை ம.சா.ஆ.19 வரிசை. மதுரை, வடமலையான் மருத்துவமனை அறிக்கைகள் ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ.20 வரிசை (21 பக்கங்கள்) (மேற்படி ஆவணங்கள் ஜெராக்ஸ் நகல் என்பதால் குறியீடு செய்யக்கூடாது என்று எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆட்சேபணை தெரிவித்தார், மேற்படி ஆட்சேபணைக்குட்பட்டு ஆவணம் குறியீடு செய்யப்பட்டது). மதுரை, வடமலையான் மருத்துவமனை மருத்துவ ரசீதுகள் ம.சா.ஆ.21 வரிசை(13 எண்ணிக்கை). மேற்படி மருத்துவமனையில் கொடுக்கப்பட்ட மொத்த ரசீது ம.சா.ஆ.22 வரிசை (8 பக்கங்கள்). வடமலையான் மருத்துவமனை Discharge Summary ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ.23. (மேற்படி ஆவணங்கள் ஜெராக்ஸ் நகல் என்பதால் குறியீடு செய்யக்கூடாது என்று எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆட்சேபணை தெரிவித்தார், மேற்படி ஆட்சேபணைக்குட்பட்டு ஆவணம் குறியீடு செய்யப்பட்டது). Grace Kennet Foundation மருத்துவமனை புறநோயாளி சீட்டு ம.சா.ஆ.24. மேற்படி மருத்துவமனை மருத்துவ ரசீதுகள் ம.சா.ஆ.25 வரிசை ( 2 எண்ணிக்கை). எனக்கு தலைக்கு எடுக்கப்பட்ட X-Ray Flim ம.சா.ஆ.26. என்னுடைய மனைவியின் வருமான வரி கணக்கு விபர அறிக்கை ம.சா.ஆ.27 வரிசை( 13 பக்கங்கள்). (மேற்படி ஆவணங்கள் மனுதாரர் சம்பந்தப்பட்டதல்ல என்பதால்

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.03.12 16:55:25 +0530

குறியீடு செய்யக்கூடாது என்று எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆட்சேபணை தெரிவித்தார், மேற்படி ஆட்சேபணைக்குட்பட்டு ஆவணம் குறியீடு செய்யப்பட்டது). என்னுடைய வங்கி கணக்கு புத்தகம் முதல் பக்கம் ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ.28. (அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது.) என்னுடைய ஊனச்சான்று நீ.ம.சா.ஆ.1. மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை** :

விபத்தானது மதுரையில் இருந்து இராமநாதபுரம் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் நடந்தது என்றால் சரிதான்.அந்த சாலையில் இருபக்கமும் கனரக வாகனங்கள் செல்லலாம் என்றால் சரிதான். நான் இருசக்கர வாகனத்தில் சென்றபோது எனக்கு பின்னால் அரசு பேருந்து வந்தது. நான் இருசக்கர வாகனத்தில் அதிவேகமாகவும், தலைக்கவசம் அணியாமாலும், சாலைவிதிகளை பின்பற்றாமாலும், அஜாக்கிரதையாகவும், அலைபேசியில் பேசிக்கொண்டு எனக்கு முன்னால் சென்ற லாரியை முந்தும் பொருட்டு எதிரே வந்த வாகனத்தை பார்த்து திகைத்து போய் திடீரென நின்று தானாக வழிந்து பின்னால் வந்த பேருந்திற்குள் விழுந்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. என்னுடைய கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பேருந்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் பேருந்திற்கு சேதம் எதுவும் இல்லை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.19 முதல் ம.சா.ஆ.25 வரையிலான ஆவணங்களை அதனை வழங்கிய மருத்துவரை விசாரித்ததால் தான் அவற்றின் உண்மை தன்மை தெரிய வரும் என்றால் சரியல்ல. அதிகமான இழப்பீடு கிடைக்கவேண்டும் என்பதற்காக மருத்துவ பில்களை உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.20 மற்றும் ம.சா.ஆ.23 ஆகிய ஆவணங்களின் அசல் என் கைவசம் உள்ளது, அவற்றின் அசல்

J JEYA SUTHAHAR
Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.03.12 16:55:31 +0530

ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. விபத்து சமயம் நான் தலைக்கவசம் அணிந்திருக்கவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.27 வரிசை ஆவணங்கள் எனக்கு தொடர்பில்லை என்பதால் அவை ஏற்கதக்க ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. விபத்து என்னுடைய கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளது என்றும், அதனால் நான் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் மற்றும் அதன் காப்பீடு நிறுவனம் ஆகியோர் இந்த வழக்கிற்கு அவசியமான தரப்பினர்கள் என்றால் சரியல்ல. என்னுடைய வருமானம் பற்றி நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயங்கள் பூரணமாக குணமடைந்துவிட்டது என்றும், அதனால் எதிர்கால மருத்துவ செலவிற்கான இழப்பீடு எதுவும் கிடைக்கதக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. நான் பல்வேறு இனங்களில் கேட்டுள்ள இழப்பீட்டு தொகை அதிகப்படியானது என்றால் சரியலல். என்னுடைய கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்றும், அதனால் எனக்கு எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டதல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை .**

சாட்சி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்து காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.03.12 16:55:36 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
இராமநாதபுரம்.